
ஓம் ஸ்ரீ சாயி ராம்



# தந்தைக்கு ஒரு மலர்

## 15. 08. 2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவையார் நல்வழி


*ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்*
*மாண்டார் வருவரோ மாநிலத்தீர் - வேண்டா*
*நமக்கு மதுவழியே நாம் போமளவும்*
*எமக்கென்னென் றிட்டுண் டிரும்.*

மாநிலத்தீர் - இப்பெரிய பூமியில் உள்ள மனிதர்களே, ஆண்டு ஆண்டு தோறும் அழுது புரண்டாலும் - இறந்தோர்க்காக வருடந்தோறும் அழுது புரண்டாலும், மாண்டார் வருவரோ - இறந்தவர் மீண்டும் உயிர்பெற்று வருவாரோ (வரமாட்டார்), வேண்டா - (ஆதலினாலே) அழ வேண்டியதில்லை, நமக்கு மது வழியே - நமக்கும் அம்மரணமே இறுதியாகும். நாம் போமளவும் எமக்கு என் என்று - (ஆதலாலே) நாம் இறக்கும் வரைக்கும் எமக்கு உறுதுணையாவது எது என்பதை உணர்ந்து, இட்டு உண்டு இரும் - இரப்போருக்குக் கொடுத்து நீங்களும் அனுபவித்துக் கவலை இன்றி இருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# அமரர்

# சண்முகம் செல்வரத்னம்

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 09.03.1930 | 17.07.2004 |

## திதி நிர்ணய வெண்பா

தாரணத்தின் ஆடி தருமமாவாசை திதி
காரணந்தான் சொல்லாதே கண்ணயர்ந்து - பூரணனை
அண்டினார் யாழ் நகரின் அண்ணலார் செல்வரத்னம்
துண்டித்தார் மண்ணின் தொடர்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச் சீமான் செல்வரத்னம் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

சிவபூமி என திருமூலரால் சிறப்பித்துக் கூறப்படும் ஈழமணித்திருநாட்டின் திருமுடியென விழங்கும் யாழ்ப்பாண மாநகரில் வதித்த செல்லையா சண்முகம் அவர்களுக்கும் அவர்தம் வாழ்க்கைத் துணைவியார் திருமதி தங்கம்மா சண்முகம் அவர்களுக்கும் மூத்த புதல்வனாக திரு. செல்வரத்னம் அவர்கள் 1930 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 9ஆம் நாளன்று திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தார். மங்கையற்கரசி, பூலோகநாயகி, கைலாயநாயகி என மூத்த சகோதரிகள் மூவருடனும் ஒரே தம்பி இரத்தினதுரையுடனும் சகோதரப் பாசப்பிணைப்பில் திகழ்ந்து அனைவருக்கும் சுடர்போல பிரகாசித்தார்.

ஆரம்பக் கல்வியை நாட்டமாகப் பயின்று யாழ். மத்திய கல்லூரியின் முன்னணி மாணவனாகத் திகழ்ந்தார். கல்லூரி வாழ்க்கையின் பின்னர் பொது நிர்வாக அரச சேவையினூடாக சுங்கத் திணைக்களத்தில் இணைந்துகொண்டார்.

குரும்பசிட்டி இராசையா அன்னம்மா தம்பதியினரின் மகளான சிவமலரை 07.02.1958ல் திருமணம் புரிந்து நல்லறத்தை நடாத்தினார் அதன் பயனாக செல்வகுமார்(பாபு), சிவகுமார்(கோபு), சண்முககுமார்(வேணு), ராஜ்குமார்(ரகு) என நான்கு மகன்களையும் செல்வஸ்ரீ(ரமா) என்ற ஒரேயொரு மகளையும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்ந்தார். பிள்ளைகளுக்கு **தந்தை சொல் மிக்க மந்திரமில்லை** என்ற பழமொழிக்கு ஒப்ப அவரவர் விரும்பியதுறையில் நாட்டமுடன் கல்விபோதித்தார். பிள்ளைகள் அனைவரும் நல்ல நிலையை அடைந்து அவர்களுக்கு திருமணத்தையும் மிகச்சிறப்பாக நடாத்தி தன் கடமையை இனிதே செய்து திருப்தி கொண்டார். தனது ஒரே மகளின் திருமணத்தின் முதல் நாளிரவு கொள்ளைபோயிருந்த நிலையிலும் மனம் தளராது அந்த திருமணத்தை சிறப்பாக நடத்திய வைராக்கியமான மனத்தை அவர் பெற்றிருந்தது இறைவனின் பெரும் கொடையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது திறமையினாலும் விடா முயற்சியினாலும் விமானநிலையத்தின் விமான நிலைய உட்புகும் (Arrival), வெளியேறும;(Departure), சுதந்திர வர்த்தக வலயம் (Free Trade Zone), பொதி (Cargo) போன்ற பல பகுதிகளின் பொறுப்பதிகாரியாகப் பணியாற்றி சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் (Director) என்ற பதவியை வகித்தார்.

குழந்தைகளிடத்தில் மிகவும் அன்பாகப் பழகும் சுபாவம் கொண்ட அவருக்கு பேரர்களாக செல்வராஜ்(சுஜன்), கிருஷ்ணராஜ்(சுதன்), சிந்துஜா(சிந்து), காயத்ரி, சரண்யா, கணாதிபன் சகானா, சிவராம், சந்தியா, ரம்யா ஆகியோர் உதித்தனர்

ஆன்மீகத்தில் அவர் தென் இந்தியத்திருத்தலங்கள் பலவற்றுக்கும் யாத்திரை சென்றார். மனித வாழவுக்கு சிறந்த ஒரு சற்குரு அவசியம் என்பதை உணர்ந்து பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவையும், காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளையும் தரிசித்து குருவருளைப் பெற்று திருவருளுக்கும் பாத்திரமானார்.

அடக்கம், அன்பு, எளிமை, தாராளமாக அனைவருக்கும் உதவிடும் பண்பு கொண்ட உள்ளம் படைத்தவராயிருந்தார். அரசியல், பொருளாதார, சமூக, சமய அனைத்துத் துறைகளிலும் அவர் பல ஈடுபாடுகளைக் கொண்டிருந்ததுடன் இன, மத, மொழி வேறுபாடின்றி அனைவருடனும் அந்நியோன்னியமாக பழகி பல நண்பர்களைப் பெற்றிருந்தார். அவுஸ்திரேலியாவில் வசித்த காலத்திலும், இலங்கைக்கு வரும் போதிலெல்லாம் தமது பழைய தொடர்புகளை நினைவுபடுத்தி அனைவரிடமும் சென்று அளவளாவி தனது நட்பை வெளிப்படுத்துவார்.

சிட்னி முருகன் ஆலயத்தில் ஆடிப்பிறப்பன்று சென்று வழிபாடியற்றி அனைவருடனும் அன்பாகப் பேசி வந்த அவர் அன்றிரவு துயிலச்சென்றார் அடுத்தநாள் வைகறை வேளையில் ஆடி மாத அமாவாசை திதியில் அவர் அரன் தாழிணை அடைந்தார்.

**எக்கருமத்தைச் செய்யும் போதும் ஊக்கத்தோடும் சிரத்தையோடும் மனமகிழ்ச்சியோடும் செய்து பழகுதல் வேண்டும். அப்படிச் செய்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பழகி வந்தால் மனஉறுதி உண்டாகும். அதாவது மனம் ஏகாக்கிர சித்தத்தைப் பொருந்தும். பொருந்தவே ஆன்மசக்தி அதிகரிக்கும். நினைத்த காரியம் நினைத்த மாத்திரத்திலே உண்டாகும். இவர் பகைவர். இவர் உறவினர் என்ற பாகுபாடு சித்தத்திற் புகுந்து கவலையை உண்டாக்காது.**

இதற்கு உதாரணபுருஷராக திகழ்ந்தவர்தான் அமரத்துவமடைந்த சீமான் செல்வரத்னம் அவர்கள். அவரது பூதவுடம்பு அழிந்தாலும், புகழுடம்பு எம் நெஞ்சங்களிலும், நினைவுகளிலும் என்றும் அழியாது நிற்கும்.

அவரது ஜீவாத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல ஆண்டவனைப் பிரார்த்திப்பதுடன், அன்னாரின் குடும்பத்தவர்கள் அனைவருக்கும் இறைவன் மனவுறுதியையும், அவருடைய பரோபகார சிந்தனையையும் வழங்கட்டும் எனப் பிரார்த்தித்து இச் சுருக்கக்குறிப்பை முடிக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**ஒரு பொல்லாப்பும் இல்லை.**
**எப்பவோ முடிந்த காரியம்.**
**நாமறியோம்.**
**முழுதும் உண்மை.**

- யோகர் சுவாமிகளின் மகாவாக்கியங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி முன்னுரை

**அரிது அரிது மானிடப்பிறப்பு அரிது** என்கின்றார் அவ்வை மூதாட்டி. அந்த மானிடப் பிறப்பிலே மனிதனாக வாழவேண்டும் என்கின்ற நிலையை நாம் பலர் தவறவிட்டுவிடுகின்றோம். பிறந்த பிறப்பை நல்ல அர்த்தமுள்ள பிறப்பாக்கி மனித செயற்பாட்டோடு வாழ்ந்தவர்களில் அமரர் செல்வரத்னம் மறக்கமுடியாதவர். அன்பு, கருணை, பரோபகாரம், ஆன்மீகம் பொதுநலம் என எல்லாவிதமான பூரணத்துவங்களும் பெற்றவர். எல்லோருக்கும் உதவிசெய்ய வேண்டும் என்கின்ற நல்ல கொள்கையை தாரக மந்திரமாகக் கொண்டவர். அவர் சார்ந்த குடும்ப உறவினர்களுக்கும் சரி, அவருடைய தெரிந்த நண்பர்கள் - தெரியாத அன்பர்கள் என எல்லோருக்கும் உதவிகள் பலவும் செய்திருக்கின்றார். இஃது சம்பந்தப்பட்ட அனைத்து இதயங்களும் அவருக்காக கண்ணீர் சிந்தும் என்பது உண்மை. சுங்கத் திணைக்களப் பணிப்பாளராக உயர் பதவி புரிந்த காலத்தில் அந்தண சிவாச்சாரியார்கள் மற்றும் தவில் நாதஸ்வர கலைஞர்கள் வெளிநாடு சென்று வரும் வேளையில் அவர்களுக்கு சகல உதவிகளையும் செய்து கௌரவமாக அனுப்பிவைப்பது அவரின் உயர்ந்த குணம். அரசியல் ரீதியில் கூட நல்ல செல்வாக்கு, புகழ் கொண்டவராக விளங்கினார். தலைநகர் கொழும்பில் பல ஆலயங்களில் திருவிழா, நவராத்திரி, திருவெம்பாவை உபயங்களை ஏற்று மிகச் சிறப்பாகச் செய்து வரும் இயல்பு இறுதிவரை இருந்தது.

இல்லறம் என்கின்ற நல்லறத்தை மேன்மையோடு நடாத்தி அவரின் அன்பப் பிள்ளைகளாய் ஐவரைப்பெற்று வாழ்ந்தார். மூத்த புதல்வன் கலாநிதி செல்வகுமார் (JP) செல்வா நிறுவனத்தின் ஸ்தாபகராகவும், ஸ்ரீதேவி கருமாரியம்மன் ஸ்ரீ ஐயப்ப சுவாமி திருக்கோவில் அறங்காவராகவும் இருந்து தந்தைபோல் சமய சமூகப் பணிகளில் ஈடுபடுகின்றார். இரண்டாவது புதல்வன் சிவகுமார் (B.Sc) கட்டிட நிபுணராக இங்கிலாந்திலும், மூன்றாவது புதல்வன் Dr. சண்முககுமார் (MBBS) மருத்துவராக அவுஸ்திரேலியாவிலும், கடைசி மகன் ராஜ்குமார் (BA) கொழும்பில் தனியார் நிறுவனமொன்றிலும் ஒரேயொரு மகளான திருமதி. செல்வஸ்ரீ சந்திரமோகன் அவுஸ்திரேலியாவிலும் வாழ்ந்து வருகின்றனர். கடந்த 10 வருடங்களுக்கு மேலாக அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வந்த அமரர் செல்வரத்னம் அவர்கள் அங்கும் சிட்னி முருகன் ஆலயத்தில் சமயப் பணியும், அங்கு வாழுகின்ற நம்மவர் பலருக்கு சமூக பணியும் புரிந்து வருகின்ற நிலையில் - கடந்த 16.07.2004 இரவு நித்திரைக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று படுத்து உறங்கியவர் மீளாத துயில் கொண்டு இறைவனடி சேர்ந்து விட்டார். அவர் செய்த புண்ணிய பலாபலன் எந்தவித சிரமங்களுமில்லாத அமைதியான மரணத்தைக் கொடுத்திருக்கிறது. கொழும்பில் கப்பித்தாவத்தைப் பிள்ளையார் கோவிலில் ஏற்பட்ட தொடர்பு பின் திரு. செல்வகுமாரின் ஸ்ரீதேவி கருமாரியம்மன் ஸ்ரீ ஐயப்ப சுவாமி திருக்கோவில் பிரதம குருவாய் தொடர்பணியாற்றி இன்றுவரை அவர்களின் குடும்பக் குருக்களாய் தொடர்போடு இருக்கின்றேன். 2002ஆம் ஆண்டு இறுதியாக அவுஸ்திரேலியாவில் அமரர் செல்வரத்னம் அவர்கள் என்னோடு இருந்து பலமணிநேரம் கதைபேசி சந்தோஷமாக இருந்தார். சிட்னி முருகன் ஆலயத்திற்கு குருக்கள் ஒருவர் தேவை வாருங்கள் என்று கூறி அன்பாகக் கேட்டிருந்தார். முடிந்தவரை பலருக்கும் உதவிகள் பலவும் செய்து நல்ல உத்தம வாழ்வு வாழ்ந்து மனைவி, பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் என எல்லா உறவுகளும் கண்டு நிறைவான வாழ்வோடு நிகரற்ற இறைவன் கழல் சென்றுவிட்டார். பிறந்த எல்லோருமே அங்கு செல்ல வேண்டியவர்களே. இருப்பினும் ஒரு பெரும் ஆலமரம்போல அவர்களின் குடும்பத் தலைவராய் இருந்தார். அவரது குடும்பத்துக்கு இதுபெரும் இழப்பு. அவரின் ஆத்மா சாந்தி பெற அனைவரும் பிரார்த்திப்பதே பெரும் தொண்டு.

*ஓம் சாந்தி சாந்தி சாந்தி*

துன்னையூர் - **சிவஸ்ரீ ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்**
(ஸ்ரீதேவி கருமாரியம்மன் ஸ்ரீஐயப்பசுவாமி உற்சவகாலகுரு)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் நிறைந்த அருமை அண்ணா!

கலியுகத்தைவிட்டு மறைந்த எங்கள் அருமை அண்ணாவே!
அறிவு நேர்மை, ஒழுக்கம் கண்ணியத்துடன் வாழ்ந்து
எத்தனை தியாகங்களைச் செய்தீர்கள்.
குலப்பெருமையை நிலைநாட்டிய அறிவுச் சுடர் – வீரத்திற்கு வீமன் – தர்மத்திற்கு கர்ணன் – பாசத்திற்கு எங்கள் அண்ணாவைத் தவிர வேறு எந்த ஜீவனும் பிறக்க முடியுமா?
உற்றார் உறவினருக்கு நல்முத்து நீங்களே!
சிறந்த இல்லறத் தலைவனாகவும், உடன் பிறந்தவர்களுக்கு உயிர்த்துணையாயும் திகழ்ந்தீர்களே!

உங்கள் பிரிவுத்துயரால்
உள்ளம் வெதும்பி ஆழ்ந்த துயரில்
தனித்துநிற்கும் அன்பு அண்ணிக்கும்,
அருமைப் பிள்ளைகளுக்கும்,
அக்காவிற்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்,
உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புத் தம்பி ராசா
(C.S. இரத்தினதுரை குடும்பம்)
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் மாமா

கொழும்புக்கு வரும்போதெல்லாம் விடுமுறை தினங்களில் எல்லாம் பம்பலப்பிட்டி இல. 9 எல்பின்டேல் அவென்யூவிலுள்ள மாமாவையும், தங்கம் மாமியையும், மற்றும் அண்ணைமாரையும், ரமா அக்காவையும் பாராமல் போவது கிடையாது. சில வேளைகளில் எங்கள் குடும்பத்தவர்கள் எல்லாரும் தங்கிச் செல்வதும் உண்டு. வந்து போகும் வேளைகளில் நாங்கள் புறப்படும்போது மாமா தனியாக வந்து அம்மாவிடம் தனது சட்டைப் பையிலிருந்து எதையோ எடுத்துக் கொடுப்பது வழக்கம். என்ன என்பது பின்னர்தான் புரிந்தது. அது பணமாக இருக்கும். இது நான் எனது கண்ணால் கண்ட - எனது தாயார் சொன்ன உண்மைக்கதை. அவரது பிள்ளைகள் எல்லோரும் எனது பெற்றோரிடத்திலும் எங்கள்மீதும் மிகுந்த அன்பு. எனது தாயாரிடம் அவர்கள் கதையொன்று கேட்ட பின்னர் அவரை **கழுதைக்காது அன்ரி** என்று கூறுவது வழக்கம். நான் பலதடவை பார்த்தபோதிலெல்லாம் மாமா புன்முறவல் பூத்தபடி தனது பேரக் குழந்தைகளுடன் நேரத்தைச் செலவிடுவார். கோபம் என்று வந்ததை ஒருநாளும் நான் அறியேன்.

அவர் செய்த பாக்கியம். தந்தை இறந்த பின்னர் திதி செய்யும் ஆடி அமாவாசைத் திதியில் - அதுவும் இந்த வருடம் இரண்டு திதியில் முதல் திதியில் தான் சென்றடைய - இரண்டாவது திதியில் அந்தியேட்டி செய்து வருடம் வருடம் அதே திதியில் தன்னை நினைவுபடுத்த - தனது பிள்ளைகளுக்கு சிறந்த ஒரு தந்தையாக அவர் மரணத்திலும் உபதேசம் செய்திருக்கின்றார் - தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்று பழமொழியை அர்த்தப் படுத்தி இறைவனின் பாதார விந்தங்களை அடைந்துவிட்டார்! -என்பதுதான், எனது அறிவுக்கு எட்டிய கருத்து.

அவரது கம்பீரமான தோற்றமும், புன்முறுவல் பூத்த முகமும் எம் எண்ணங்களில் இருந்தபடியே இருக்கும்.

அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதுடன், அவரது பிரிவால் வாடும் மாமிக்கும், அண்ணாமாருக்கும், ரமா அக்கா, அத்தான், அண்ணிமார், பேரப்பிள்ளைகள் அனைவருக்கும் எமது குடும்பத்தவர் சார்பில் ஆழ்ந்த துயரத்தை தெரிவித்து முடிக்கின்றேன்.

***ஆன்மா ஒருபோதும் அழியாதது.***

**தங்கராசா முகுந்தன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞான குரு வாணி பதம் நாடு

# குரு தோத்திரம்

தந்தை தாயாவானும் சார்கதியிங்காவானும்
அந்தமிலா இன்பம் நமக்காவானும் - எந்தமது
ஊனாகுவானும் உயிராகுவானும் அருட்
கோனாகுவானும் குரு.

அகண்ட மண்டலாகாரம் வ்யாப்தம் யேன சராசரம்
தத்பதம் தர்ஸிதம் யேன தஸ்மை ஸ்ரீ குரவே நம.

அகண்ட மண்டல வடிவான சராசரப் பிரபஞ்சம் அனைத்தும் எவரால் வியாபிக்கப்பட்டுள்ளதோ, அப் பரமநிலை எவரால் காட்டப்பட்டதோ அந்தப் பெருமைவாய்ந்த குருவிற்கு நமஸ்காரம்.

அஞ்ஞான திமிராப்தஸ்ய ஜ்ஞானாஞ்ஜன ஸலாகயா
சக்ஷுருன்மீலிதம் யேன தஸ்மை ஸ்ரீ குரவே நம.

அஞ்ஞானமாகிற நோயால் குருடனாயிருந்த எனது கண் எவரால் ஞானமெனும் மைதீட்டிய சலாகையைக் கொண்டு திறந்து வைக்கப்பட்டதோ அந்தப் பெருமைவாய்ந்த குருவிற்கு நமஸ்காரம்.

குருப் பிரம்மா குரு விஷ்ணு குரு தேவோமகேஸ்வரஹா
குரு சாட்ஷாத் பரப்பிரம்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம.

குருவே பிரம்மா, குருவே விஷ்ணு, குருவே மகேஸ்வரனான தேவதேவன். குருவே கண்கண்ட பிரம்மம். அவ்வளவு பெருமைவாய்ந்த குருவிற்கு நமஸ்காரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸர்வஸ்ருதி ஸிரோரத்ன விராஜித பதாம்புஜ
வேதாந்தாம்புஜ ஸூர்யாய தஸ்மை ஸ்ரீ குரவே நம.

வேதங்களின் உச்சியில் விளங்கும் இரத்தினங்கள் எவருடைய பாத கமலங்களில் பிரகாசிக்கின்றனவோ, எவர் வேதமாகிற தாமரையை மலர்விக்கும் சூரியன் போன்றவரோ அந்தப் பெருமை மிக்க குருவிற்கு நமஸ்காரம்.

ந குரோ ரதிகம் தத்வம் ந குரோதிகம் தப
தத்வஜ்ஞானாத் ப்ரம்நாஸ்தி தஸ்மை ஸ்ரீ குரவே நம.

குருவிற்கும் மேலான தத்துவம் இல்லை. தத்துவ ஞானத்திற்கு மேலான ஞானமும் இல்லை. அவ்வளவு பெருமைவாய்ந்த குருவிற்கு நமஸ்காரம்.

அநேக ஜன்ம ஸமப்ராப்த கர்மேந்தன விதாஹினே
ஆத்ம ஜ்ஞானாக்னி தானேன தஸ்மை ஸ்ரீ குரவே நம.

பல பிறவிகளில் சேகரிக்கப்பட்ட கருமமாகிய விறகை ஆத்மஞானத் தீயைக் கொடுத்து எரியவிட்ட அந்தப் பெருமை வாய்ந்த குருவிற்கு நமஸ்காரம்.

மந்நாத ஸ்ரீ ஜகந்நாதோ மத்குரு ஸ்ரீ ஜகத்குரு
மதாத்மா ஸர்வபூதாத்மா தஸ்மை ஸ்ரீ குரவே நம.

எனது நாதனே ஜகந்நாதன் எனது குருவே ஜகத்குரு. எனது ஆத்மாவே எல்லா உயிர்களிலும் ஆத்மா. அவ்வளவு பெருமை வாய்ந்த குருவிற்கு நமஸ்காரம்.

த்யானமூலம் குரோர் மூர்த்தி பூஜாமூலம் குரோ பதம்
மந்த்ர மூலம் குரோர் வாக்யம் மோஷமூலம் குரோ க்ருபா.

குருவின் வடிவம் தியானத்திற்கு வேர். குருவின் பாதம் பூஜைக்கு வேர். குருவின் சொல் மந்திரத்திற்கு வேர். குருவின் கிருபை மோட்சத்திற்குவேர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்த மானந்தகரம் ப்ரஸன்னம் ஜ்ஞானஸ்வரூபம் நிஜபோத யுக்தம்
யோகீந்த்ர மீட்யம் பவரோக வைத்யம் ஸ்ரீஸத்குரும் நித்யமஹம் பஜாமி.

ஆனந்தமே உருவாகியவரும், ஆனந்தத்தை அளிப்பவரும், மலர்ந்த முகத்தினரும், ஞான வடிவினரும், யோகிகளின் தலைவரும், பூஜிக்கத் தகுந்தவரும், பிறவி நோய்க்கு வைத்தியரும் ஆகிய பெருமை வாய்நத குருவை இடைவிடாது நான் போற்றுகின்றேன்.

ப்ரஹ்மானந்தம் பரமஸுகதம் கேவலம் ஜ்ஞான மூர்த்திம்
த்வந்வாதீதம் ககன ஸத்ருஸம் த்வமஸ்யாதி லஷ்யம்
ஏகம் நித்யம் விமல மசலம் ஸர்வதீ ஸாஷி பூதம்
பாவாதீதம் த்ரிகுண ரஹிதம் ஸத்குரும் தம் நமாமி

பிரம்மானந்த ஸ்வரூபியும், பரமசுகத்தைத் தருபவரும், தனிஞானமே வடிவுகொண்டவரும், இரட்டைகளுக்கு அப்பாற்பட்டவரும், ஆகாயத்திற்கு ஒப்பானவரும், தத்துவமஸி முதலிய மகாவாக்கியங்களின் கருத்தாகியவரும், என்றும் ஒன்றேயாகியவரும், மாசற்றவரும், அசைவற்றவரும், எல்லோருடைய புத்தியிலும் சாட்சியாய் விளங்குபவரும், பாவனைக்கெட்டாதவரும், முக்குணங்களைக் கடந்தவரும் ஆகிய அவரை நான் இடைவிடாது நமஸ்கரிக்கின்றேன்.

ஓம் ஸ்ரீ தஷிணாமூர்த்தி ஸமாரம்பாம் சங்கராசார்ய முத்யமாம்
அஸ்மத் ஆசார்ய பர்யந்தாம் - வந்தேகுரு பரம்பராம்.

பரமசிவனையே ஆதிகுருவாகவும் ஆதி சங்கரரையே நடுநாயகமாகவும் கொண்டு எங்கள் எங்கள் குருவரைக்கும் துலங்கும் குரு பரம்பரைக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசீப முனிவர் அருளிய
# விநாயகருக்குரிய
# காரிய சித்தி மாலை

பந்தம் அகற்றும் அனந்தகுணப்
பரப்பும் எவன்பால் உதித்திடுமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து கரந்திடுமோ
சந்த மறை ஆகமங்கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுதிடுவோம்!

உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருளெவன் அவ்
உலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டும் களைகண் எவன் அந்த
உலக முதலாம் கணபதியை
உவந்தே சரணம் அடைகின்றோம்!

இடர்கள் முழுதும் எவனருளால்
எரி வீழும் பஞ்செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச் செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தியாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்தம் ஆகி அறிந்தறியாத்
திறத்தினாலும் உயிர்க்குநலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப்பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்!

செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப்படும் அப்பொருள் யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினையின் பயன்விளைவில்
ஊட்டிவிடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்!

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும்
விமலன் யாவன் விறங்கும் வர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன் எண் குணன் எவன் அப்
போத முதலைக் கணபதியை
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்!

மண்ணில் ஓர் ஐங்குணமாகி
வதிவான் எவன் நீர், இடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன் தீயின்
மூன்றாய் நவில்வான் எவன் வளியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன்வான் இடைஒன்றாம்
அண்ணல் எவன் அக் கணபதியை
அன்பால் சரணம் அடைகின்றோம்!

பாச அறிவில் பசு அறிவில்
பற்றற்கரிய பரன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பயிலப் பிணிக்கும் அவன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக் கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம்!

## நூற் பயன்

இந்த நமது தோத்திரத்தை
யாவன் மூன்று தினமும் உம்மைச்
சந்திகளில் தோத்திரஞ் செயினும்
சகல கரும சித்திபெறும்
சிந்தை மகிழச் சுகம்பெறும் எண்
தினம் உச்சரிக்கின் சதுர்த்தியிடைப்
பந்தம் அகல ஓர் எண்கால்
படிக்கில் அட்ட சித்தியுறும்.

திங்கள் இரண்டும் தினந் தோறும்
திகழ ஒரு பான் முறையோதில்
தங்கும் அரச வசியமாம்
தயங்க இருபத்தொருமுறைமை
பொங்கு உழுவலால் கிளப்பின்
பொருவின் மைந்தர் விழுக்கல்வி
துங்க வெறுக்கை முதற் பலவும்
தோன்றும் எனச் செப்பினர் மறைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்

***திருச்சிற்றம்பலம்***

பிரமன்தன் சிரமரிந்த பெரியோய் போற்றி
பெண்ணுருவோ டாணுருவாய் நின்றாய் போற்றி
கரநான்கும் முக்கண்ணும் உடையாய் போற்றி
காதலிப்பார்க் காற்ற எளியாய் போற்றி
அருமந்த தேவர்க் கரசே போற்றி
அன்றரக்கன் ஐந்நான்கு தோளுந் தாளுஞ்
சிரம் நெரித்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி. *(அப்பர்)*

பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே.

ஏகநாயகனை இமையவர்க்கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநாயகனைப் புயல்வணற்கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையாவூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலை விண்ணிழிசெழுங் கோயில்
யோகநாயகனை யன்றி மற்றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீருந் திருவும் பொலியச் சிவலோகநாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார்பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உழறி உமைமணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

நன்மைபெருகருள் நெறியே
வந்தணைந்து நல்லூரில்
மன்னு திருத்தொண்டனார் வணங்கி
மகிழ்ந்து எழும் பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை
முடிக்கின்றோம் என்றவர் தஞ்
சென்னிமிசைப் பாத மலர்
சூட்டினான் சிவபெருமான்.

***திருச்சிற்றம்பலம்***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மஹாலக்ஷ்மி அஷ்டகம்

நமஸ்தேஸ்து மகாமாயே ஸ்ரீபீடே ஸுரபூஜிதே
சங்கு சக்ர கதா ஹஸ்தே மஹாலக்ஷ்மி நமோஸ்துதே

நமஸ்தே கருடாரூடே டோலாஸுர பயங்கரி
ஸர்வ பாப ஹரே தேவி மஹாலக்ஷ்மி நமோஸ்துதே

ஸர்வஜ்ஞே ஸர்வ வரதே ஸர்வ துஷ்ட பயங்கரி
ஸர்வ துக்க ஹரே தேவி மஹாலக்ஷ்மி நமோஸ்துதே

ஸித்தி புத்தி ப்ரதே தேவி புத்தி முத்திப் ப்ரதாயினி
மந்த்ர மூர்த்தே ஸதா தேவி மஹாலக்ஷ்மி நமோஸ்துதே

ஆதியந்த ரஹிதே தேவி ஆதிசக்தி மஹேஸ்வரி
யோகக்ஞே யோகஸம்பூதே மஹாலக்ஷ்மி நமோஸ்துதே

ஸ்தூல ஸூஷ்ம மஹா ரௌத்ரே மஹாசக்தி மஹாதரே
மஹா பாபஹரே தேவி மஹாலக்ஷ்மி நமோஸ்துதே

பத்மாஸன ஸ்திதே தேவி பரப்ரஹ்ம்ம ஸ்வரூபிணி
பரமேஸி ஜகன்மாதா மஹாலக்ஷ்மி நமோஸ்துதே

ஸ்வேதாம் பரதரே தேவி நானாலங்கார பூஜிதே
ஜகத்ஸ்திதே ஜகன்மாதா மஹாலக்ஷ்மி நமோஸ்துதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கருமாரியம்மன் ஸ்தோத்திரம்

கற்பூரநாயகியே! கனகவல்லி
காளி மகமாயி! கருமாரியம்மா!
பொற்கோவில் கொண்ட சிவ காமியம்மா!
பூவிருந்த வல்லி தெய்வ யானையம்மா!
விற்கோல வேதவல்லி விசாலாட்சி!
விழிக் கோல மாமதுரை மீனாட்சி
பொற்கோவில் தானமைத்தேன் இங்குதாயே!
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே! - கற்பூர

புவனமுழுதாளுகின்ற புவனேஸ்வரி
புரமெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி
நவநவமாய் வடிவாகும் மகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே சர்வேஸ்வரி
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி
காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி
உவமான பரம்பொருளே ஜகதீஸ்வரி
உன்னடிமை சிறியேனை நீ ஆதரி - கற்பூர

உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறைவிடத்தில் முறையிடுவேன் தாயே எந்தன்
அன்னையவள் நீயிருக்க உலகில் மற்ற
அன்னியரை கெஞ்சிடுதல் முறையோ அம்மா
கண்ணீரைத் துடைத்துவிட ஓடி வா அம்மா!
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா
சின்னவனின் குரல்கேட்டு உன்முகம் திருப்பு!
சிரித்தபடி என்னைத் தினம் வழியனுப்பு - கற்பூர

கண்ணிரண்டும் உன்உருவே காணவேண்டும்
காலிரண்டும் உன்னையே நாடவேண்டும்
பண்ணமைக்கும் நா உனையே பாடவேண்டும்
பக்தியோடு கை உனையே கூடவேண்டும்
எண்ணமெல்லாம் உன் நினைவே ஆகவேண்டும்
இருப்பதெல்லாம் உன்னுடையதாகவேண்டும்
மண்ணளக்கும் சமயபுர மாரியம்மா
மகனுடைய குறைகளை நீ தீருமம்மா! - கற்பூர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்றியினுள் குங்குமமே நிறைய வேண்டும்
நெஞ்சினிலும் திருநாமம் வழியவேண்டும்
கற்றதெல்லாம் மென்மேலும் பெருகவேண்டும்
கவிதையிலே உன்நாமம் வாழவேண்டும்
சுற்றமெல்லாம் நீடூழி வாழவேண்டும்
ஜோதியிலே நீயிருந்து ஆளவேண்டும்
மற்றதெல்லாம் நானுனக்கு சொல்லலாமா!
மடிமீது பிள்ளை என்னைத் தள்ளலாமா - கற்பூர

அன்னைக்கு உபசாரம் செய்வதுண்டோ
அருள்செய்ய இந்நேரம் ஆவதுண்டோ
கண்ணுக்கு இமை இன்றிக் காவலுண்டோ
கன்றுக்கு பசுவன்றி சொந்தமுண்டோ
முன்னைக்கும் பின்னைக்கும் பார்ப்பதுண்டோ
முழுமைக்கும் நீ எந்தன் அன்னை அன்றோ
எண்ணெய்க்கும் விளக்குக்கும் பேதமுண்டோ
என்றைக்கும் நான் உந்தன் பிள்ளையன்றோ - கற்பூர

அன்புக்கே நான் அடிமை ஆகவேண்டும்
அறிவுக்கே என் காது கேட்கவேண்டும்
வம்புக்கே போகாது இருக்கவேண்டும்
வஞ்சத்தை எந்நெஞ்சம் அறுக்கவேண்டும்
பண்புக்கே உயிரவாழ ஆசை வேண்டும்
பரிவுக்கே நான் என்றும் பணிய வேண்டும்
என்பக்கம் இவையெல்லாம் இருக்க வேண்டும்
என்னோடு நீ என்றும் வாழ வேண்டும். - கற்பூர

கும்பிடவோ கையிரண்டு போதவில்லை
கூப்பிடவோ நா ஒன்றால் முடியவில்லை
நம்பிடவோ மெய்யதனில் சக்தியில்லை
நடந்திடவோ காலிரண்டால் ஆகவில்லை
செம்பவள வாயழகி! உன்னெழிலோ
சின்ன இரு கண்களுக்குள் அடங்கவில்லை
அம்பளவு விழியாளே உன்னை என்றும்
அடிபணியும் ஆசைக்கோர் அளவில்லை - கற்பூர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றாகிக் கனலாகிக் கடலாகினாய்
கருவாகி உயிராகி உடலாகினாய்
நேற்றாகி இன்றாகி நாளையாகினாய்
நிலமாகி பயிராகி உணவாகினாய்
தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்
போற்றாத நாளில்லை தாயே உன்னை
பொருளோடு புகழோடு வைப்பாய் என்னை - கற்பூர

# ஹாரதி

ஜெய ஜெய ஜெய சக்தி ஓம்ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய அனுதினம் பாடிப்பணிந்தோம் ஜெகமெங்கும்
அமைதியைத் தா ஓம்ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க தேவையெல்லாம் அடைய
- அம்மம்மா
தேவையெல்லாம் அடைய பக்தி பெருகிட பாடிஉருகிட பணிப்பாய்
அன்பில் எம்மை - ஓம்ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

இரண்டுகள் போக மூன்றுகள் அகல ஈஸ்வரி வரமருள்வாய்
- அம்மம்மா
ஈஸ்வரி வரமருள்வாய் கரங்குவித்தோம் இனிக் காலைவிடோமடி
கருணையுடன் அணைப்பாய் - ஓம்ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

காசினிலெங்கும் வேற்றுமைபோகக் கருத்தினில் அன்பருள்வாய்
-அம்மம்மா
கருத்தினில் அன்பருள்வாய் தேசுடன் வாழக் காட்டடி காட்சி தேவியுன்
அடைக்கலம் நாம் - ஓம்ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான நல்ஒளி தீபம் வைத்து ஞான
நல்ஒளி தீபம் வைத்து நமஸ்காரம் செய்து ஹாரதி செய்தோம் ஞாலத்திற்
கமைதியைத் தா - ஓம்ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிற்றம்பலத்தே திருநடஜோதி

ஜோதியுட் ஜோதியுட் ஜோதி - சுத்த
ஜோதி சிவ ஜோதி ஜோதியுட் ஜோதி
ஜோதியுட் ஜோதியுட் ஜோதி

சிவமே பொருளென்று தேற்றி - என்னைச்
சிவவெளிக்கேறும் சிகரத்திலேற்றிச்
சிவமாக்கிக் கொண்டது பாரீர் - திருச்
சிற்றம்பலத்தே திருநடஜோதி - ஜோதி

வித்தெல்லாம் ஒன்றென்று நாட்டி - அதில்
விளைவு பலபல வேறென்று காட்டி
சித்தெல்லாம் தந்தது பாரீர் - திருச்
சிற்றம்பலத்தே திருநடஜோதி - ஜோதி

சொல்வந்த அங்கங்கள் ஆறும் - ஒரு
சொல்லாலே ஆமென்றச் சொல்லாலே வீறும்
செல்வம் கொடுத்தது பாரீர் - திருச்
சிற்றம்பலத்தே திருநடஜோதி - ஜோதி

தங்கோல் அளவெனக் கோதி - சுத்த
சமரச சத்திய சன்மார்க்க நீதிச்
செங்கோலளித்தது பாரீர் - திருச்
சிற்றம்பலத்தே திருநடஜோதி - ஜோதி

ஆபத்தை நீக்கி வளர்த்தே - சற்றும்
அசையாமல் அவியாமல் அடியேனுளத்தே
தீபத்தை வைத்தது பாரீர் - திருச்
சிற்றம்பலத்தே திருநடஜோதி - ஜோதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்பால் வருபவர்க்கின்றே - அருள்
ஈகின்றேன் ஈகின்றேன் ஈகின்றேன் என்றே
தென்பாலிருந்தது பாரீர் - திருச்
சிற்றம்பலத்தே திருநடஜோதி - ஜோதி

நவவெளி நால்வகையாகி - ஒரு
நடுவெளிக்குள்ளே நடத்திய நீதி
சிவவெளியாமிது பாரீர் - திருச்
சிற்றம்பலத்தே திருநடஜோதி - ஜோதி

எம்பொருள் எம்பொருள் என்றே - சொல்லும்
எல்லாச் சமயத்து ளெல்லார்க்கும் ஒன்றே
செம்பொருளென்பது பாரீர் - திருச்
சிற்றம்பலத்தே திருநடஜோதி - ஜோதி

பிறந்து பிறந்து உழன்றேனை - என்றும்
பிறவா திறவாப் பொறுமை தந்தூனைச்
சிறந்தொளிர் வித்தது பாரீர் - திருச்
சிற்றம்பலத்தே திருநடஜோதி - ஜோதி

பாரிடம் வானிடம் மற்றும் - இடம்
பற்றிய முத்தர்கள் சித்தர்கள் முற்றும்
சேரிடமாமிது பாரீர் - திருச்
சிற்றம்பலத்தே திருநடஜோதி - ஜோதி

எண்ணிய எண்ணங்கள் எல்லாம் - நான்
எண்ணியவாறு இனிதுதந்தென்னை
திண்ணியனாக்கிற்றுப் பாரீர் - திருச்
சிற்றம்பலத்தே திருநடஜோதி - ஜோதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ வேங்கடேஸ்வர சுப்ரபாதம்

வந்துதித்தாய் ராமா நீ
கௌசலைதன் திருமகனாய்
சிந்துமொளிச் சிறுகாலை
திசை எங்கும் புலர்கிறது!
மந்திரங்கள் வாய்மொழிந்து
வந்தனைகள் புரிந்தருளச்
செந்திருக்கண் அருள்பொழிய
வேங்கடவா எழுந்தருள்வாய்!

எழுந்தருள்வாய் வெல் கருடக்
கொடியுடையாய் எழுந்தருள்வாய்!
எழுந்தருள்வாய் திருக்கமலை
விழைமார்பா எழுந்தருள்வாய்!
எழுந்தருள்வாய் மூவுலகும்
காத்தருள எழுந்தருள்வாய்
எழுந்தருள்வாய் கோவிந்தா
வேங்கடவா எழுந்தருள்வாய்!

போர்புரிந்து மது கைடபர்
தமையொழித்தான் உளத்தொளியே
பார் அனைத்தும் காத்தளிக்கும்
பேரழகின் அருள் உருவே
பார் அகத்தார் விழைந்து ஏத்தும்
சீர்சீலப் பெருந்தாயே
கார் வண்ண வேங்கடத்தான்
திருத்தேவி! எழுந்தருள்வாய்!

திங்கள் ஒளித் திருமுகத்தில்
பொங்கும் அருள் பொழிபவளே!
இங்குகலை வாணியுடன்
இந்திராணி அம்பிகையாம்
மங்கையர்கள் தொழுதேத்தும்
மாண்புடைய தனித்தலைவி!
செங்கமல வேங்கடத்தான்
திருத்தேவி! எழுந்தருள்வாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைவிடத்தும் பலவிடத்தும்
சுழன்று திரி ஏழ்முனிவர்
சலித்தறியாத் தவம் இயற்றிச்
சந்தியாவந் தனம் முடித்து
நிலைபெறுநின் புகழ்சொல்லி
நின்பாதம் சேவிக்க
மலையடைந்து காத்துளர்காண்
வேங்கடவா எழுந்தருள்வாய்!

ஆங்கந்தப் பிரம்மாவும்
அறுமுகனும் தேவர்களும்
ஓங்கிலஉல கன்றளந்த
உயர்கதைகள் பாடுகின்றார்
ஈங்கு இந்த வியாழமுனி
பஞ்சாங்கம் ஓதுகின்றார்
தீங்கவிகள் செவிமடுக்க
வேங்கடவா எழுந்தருள்வாய்!

நல்கமுகு தென்னைகளில்
பாளைமணம் நெகிழ்ந்தனவால்
பல்வண்ண மொட்டுக்கள்தாம்
பனித்தேனோடு அலர்ந்தனவால்
புல்லரிக்கும் மெல் ஈரப்
பூந்தென்றல் தவழ்கிறதால்
எல்லாமும் அணிந்தருள
வேங்கடவா எழுந்தருள்வாய்!

நின்திருப்பேர் பல கேட்டு
நின்னடியார் மெய்மறக்க
நின்கோயிற் பைங்கிளிகள்
தீங்கனியாம் அமுதருந்தி
நின்திருப்பேர் ஆயிரத்தால்
நெடும்புகழை மிழற்றிடுமால்
நின்செவியால் துய்த்தருள
வேங்கடவா எழுந்தருள்வாய்!

எவ்விடத்தும் நிலையாக
நின்றறியா நாரதரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விடத்துன் பெருமைகள்தாம்
ஈர்ப்பதனால் நிலை கொண்டார்
செவ்விய தன் வீணையில் உன்
திருச்சரிதை மீட்டுகின்றார்
அவ்விசையைக் கேட்டருள
வேங்கடவா எழுந்தருள்வாய்!

வெண்கமல ஒண்மலர்கள்
விழைத்த மதுமிகவருந்திக்
கண்மயங்கி மலர்முகட்டுள்
காலைவரை சிறைகிடந்த
வண்டினங்கள் ரீங்கரித்தே
வந்தனவால் நினைத்தொழவே
தண்ணருளால் சேவைதர
வேங்கடவா எழுந்தருள்வாய்!

கனமுலைகள் நிமிர்ந்தசையக்
கைவளைகள் ஒலியெழுப்ப
மனமகிழ்ந்து தயிர்கடையும்
மத்தொலியும் திசை ஒலியும்
சினந்தனபோல் எதிரொலிக்க
நெடும் துதிகள் முழங்கிடுமால்
நினக்கிவைதாம் மேட்டிலையோ?
வேங்கடவா எழுந்தருள்வாய்!

பெருமான்நின் திருநிறத்தைப்
பெற்றுளதாய்க் குவளைசொலும்
கருங்குவளைக் காட்டிடையே
களித்துலவும் வண்டுகள்தாம்
பெருமான்நின் திருநிறத்தைப்
பெற்றுளம்யாம் பெரிதெனுமே
வருபெரும்பேர் பகை தவிர்க்க
வேங்கடவா எழுந்தருள்வாய்!

வேண்டுபவர் வேண்டுவன
விழைந்தருளும்பெருவரதா!
மாண்புடையாள், மலர் அமர்ந்தாள்
மகிழ்ந்துறையும் திருமார்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈண்டுலகம் அனைத்தினொடும்
இயைந்தமைந்த உறவுடையோய்
காண்பரிய கருணையனே
வேங்கடவா எழுந்தருள்வாய்!

மின்தவழும் சடையானும்
பிரம்மாவும் சனந்தனரும்
இன்றுனது கோனேரித்
திருத்தீர்த்தம் தனில்மூழ்கி
நின்னருளைப் பெற விழைந்தே
நெடுவாயில் நிலைநின்றார்
இன்றவர்க்குன் அருள் பொழிய
வேங்கடவா எழுந்தருள்வாய்!

திருமலையாய் சேடத்தாய்
கருடத்தாய் வேங்கடத்தாய்
திருநாரா யணமலையாய்
விருடபத்தாய் விருடத்தாய்
பெருமானே எனப் புகழ்ந்து
தேவரெலாம் திரண்டனர்காண்
திரண்டுளரைப் புரந்தருள
வேங்கடவா எழுந்தருள்வாய்!

அருளிடுநின் செயல் முடிப்பான்
அட்டதிக்குப் பாலர்களாம்
பெரு நெறிய அரன், இந்தரன்
அக்கினியான் பேர் இயமன்
வருணனொடு நைருதியான்
வாயுவொடு குபேரனும்நின்
திருவடிக் கீழ்க் காத்துளரால்
வேங்கடவா எழுந்தருள்வாய்!

திருமலைவாழ் பெருமானே
திருஉலாவுக்கு எழுகையில்நின்
கருடநடை சிம்மநடை
நாகநடை முதலாய
திருநடைகள் சிறப்புணர்ந்து
திருத்தமுறக் கற்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருடசிம்ம நாகருளார்
வேங்கடவா எழுந்தருள்வாய்!

சூரியனார் சந்திரனார்
செவ்வாயார் புதன் வியாழர்
சீர்மிகுந்த சுக்கிரனார்
சனி ராகு கேதிவர்கள்
ஆர்வமுடன் நின் தொண்டர்க்கு
அடித்தொண்டு புரிந்துனது
பேரருளைப் பெற நின்றார்
வேங்கடவா எழுந்தருள்வாய்!

நின்முத்தி விழையாமல்
நின்னை ஒன்றே மிக விழைந்து
நின்பாத தூளிகளைத்
தம்தலையில் தாம் தரித்தோர்
சென்றிடுவாய் கலிமுடிந்தால்
இங்கிருந்துன் பரமபதம்
என்பதற்கே அஞ்சினர்காண்
வேங்கடவா எழுந்தருள்வாய்!

எண் அரிய தவம் இயற்றி
இன்சுவர்க்கம் முத்திபெறும்
புண்ணியர்கள் செல்வழிநின்
புகழ்க்கோயில் கலசங்கள்
கண்டனரேல் நின்கோயில்
காட்சிக்கே பிறப்பெடுப்பார்
புண்ணியனே அவர்க்கருள
வேங்கடவா எழுந்தருள்வாய்!

மண்மகளின் திருக்கேள்வா
மாக்கருணைக் குணக்கடலே
திண்புயத்துக் கருடனுடன்
நாகனுமே சரண்புகுந்தார்
எண்அரிய தேவர்களில்
ஈடு இணை இல் பெருந்தேவா
மண்உலகோர் தனிப்புகலே
வேங்கடவா எழுந்தருள்வாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்மநாபா புருடோத்தமா
வாசுதேவா வைகுண்டா
சத்தியனே மாதவனே
சனார்த்தனனே சக்ரபாணி
வத்சலனே பாரிசாதப்
பெருமலர்போல் அருள்பவனே
உத்தமனே நித்தியனே
வேங்கடவா எழுந்தருள்வாய்!

திருமகள் தன் திரு அணைப்பில்
திருத்துயில்கொள்திரு அழகா
திருவிழியால் பெருஉலகில்
அருள்பொழியும் பெருவரதா
திருஉடையாய் திருக்குணத்தாய்
திருத்தூயாய் திருப்புகழாய்
பெருவயிரத் திருமுடியாய்
வேங்கடவா எழுந்தருள்வாய்!

மச்சநாதா கூர்மநாதா
வராகநாதா நரசிங்கா
நச்சிவந்த வாமனனே
பரசுராமா ரகுராமா
மெச்சுபகழ் பலராமா
திருக்கண்ணா கல்கியனே
இச்சகத்து வைகுந்தா
வேங்கடவா எழுந்தருள்வாய்!

ஏலமொடு நறுலவங்க
கனசார மணங்கமழும்
சீலமிகு தெய்வீகத்
திருத் தீர்த்தம் தலைசுமந்து
ஞாலமுய்ய வேதமொழி
நவிற்றுமிந்த வேதியர்கள்
கோலமிகு கோயிலுற்றார்
வேங்கடவா எழுந்தருள்வாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணனும்தான் வந்துதித்தான்
அலர்ந்தனவால் தாமரைகள்
பெருவியப்பால் புள்ளினங்கள்
பெயர்த்தெழுந்து சிலம்பினகாண்
திருமார்பா வைணவர்கள்
மங்கலங்கள் மிகமொழிந்தார்
அறிதுயில் ஏன் அருள்விருந்தே
வேங்கடவா எழுந்தருள்வாய்!

நாமகள் தன் நாயகனும்
தேவர்களும் மங்கலமாம்
காமர் எழிற் கண்ணாடி
தாமரைகள் சாமரங்கள்
பூமருவு பொன்விளக்கு
புகழ்க் கொடிகள் ஏந்தினரால்
தேமருவு மலர்மார்பா
வேங்கடவா எழுந்தருள்வாய்!

திருமார்பா பெருங்குணங்கள்
சிறந்தோங்கப் பொலிபவனே
பெரும் பிறவிக் கருங்கடலின்
கரைபுணர்க்கும் சேது அணையே
ஒருவேதத்து உட்பொருளே
மயர்வு அறியா மதிநலத்தார்
திருத்துய்ப்புக்கு உரியவனே
வேங்கடவா எழுந்தருள்வாய்!

விழித்து எழு நற்காலையில் இத்
திருப்பள்ளி எழுச்சிதனை
விழைந்துணர்ந்து படிப்பவரைக்
கேட்பவரை நினைப்பவரை
வழுத்துகின்றார் எவர் அவர்க்கு
வரங்களொடு முத்திதர
எழுந்தருள்வாய், எழுந்தருள்வாய்,
வேங்கடவா எழுந்தருள்வாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருட் ஜோதி வணக்கம்

ஜோதி ஜோதி ஜோதி ஜோதி ஜோதியே ஜெக ஜோதியே
ஆதி ஆதி ஆதி ஆதி ஆதியே அருள் ஆதியே

நீதி நிழலில் அன்றும் இன்றும் நின்றிலங்கும் ஜோதியே
நிமல வடிவில் உலக முழுதும் நிறைந்த எங்கள் ஜோதியே

விண்ணுலகமும் மண்ணுயிர்களும் வேத விதியும் ஜோதியே
கண்ணுளாடும் மணியும் ஒளியும் கருணைவடிவும் ஜோதியே

அன்புமயமும் அறிவிலுயர்வும் ஆன்ம ஞானமும் ஜோதியே
அரிய தபசு புரிய நமதுள் எரியும் ஜோதி ஜோதியே

திருபெருகிய அருளொளிமயத் தீப ஜோதி ஜோதியே
கிருபை பெருகி குருவருள் பெற வருக வருக ஜோதியே

கணபதியொடு முருகனும் கலைவாணியும் பரம் ஜோதியே
கதிர்மதியொடு உலகளாவிய காரணப் பொருள் ஜோதியே

## திருப்புகழ்

**நிறைமதி முகமெனு மொழியாலே**
**நெறிவிழி கணையெனு நிகராலே**
**உறவுகொள் மடவர்கள் உறவோமே**
**உனதிருவடியிணை யருள்வாயே**
**மறைபயிலரிதிரு மருகோனே!**
**மருவலரசுரர்கள் குலகாலா**
**குறமகள் தனைமணம் அருள்வோனே**
**குருமலை மருவிய பெருமாளே!**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

**செல்லையா சண்முகம்**
**மணந்தது**
**தங்கம்மா**

- மங்கையற்கரசி – செல்வத்துரை
- பூலோகநாயகி – குஞ்சிதபாதம்
- கைலாயநாயகி – பரமநாதன்
- **செல்வரத்னம்** – சிவமலர்
  - செல்வகுமார் (பாபு) – சாந்தினி
    - செல்வராஜ்(சுஜன்)
    - கிருஷ்ணராஜ்(சுதன்)
    - சிந்துஜா(சிந்து)
  - சிவகுமார் (கோபு) – விஜயந்தி
    - காயத்ரி
  - சண்முககுமார் ( வேணு) – உத்தரகோசமங்கை
    - சரண்யா
    - கணாதிபன்
  - ராஜ்குமார் (ரகு)
    - சகானா
    - சிவராம்
  - செல்வஸ்ரீ (ரமா) – சந்திரமோகன்
    - சந்தியா
    - ரம்யா
- இரத்தினதுரை – சரோஜினிதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ACKNOWLEDGEMENT

We sincerely thank all relatives and friends who attended the funeral our beloved father, sent messages of sympathy and participated in the religious rites and helped in various ways for the successful performance of these ceremonies.

*Family Members*

# நன்றி நவிலல்

எமது குடும்பத்தலைவரின் பிரிவு கேட்டு வந்து உடன் இருந்து தேற்றிய உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும், கடைசிவரை நின்று எமக்கு உதவிகள் புரிந்தவர்களுக்கும், நேரிலும், தொலைபேசியிலும் ஆறுதல் கூறிய அனைவருக்கும், சகல வழிகளிலும் எமக்கு உதவிபுரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் அனைவருக்கும் எமது நன்றிகளை மீண்டும் தெரிவிக்கின்றோம்.

**குடும்பத்தினர்,**
159B, Homebush Road,
Strathfield,
NSW 2135
Australia.
Tel: 00612-97421424

No. 428, R A De Mel Mawatha,
Colombo – 3,
Tel: 2575281, 2574907

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org